museum of modern
and contemporary art
sri lanka

PRESS RELEASE

2022 செப்டம்பர்

# இலங்கையின் நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியகமானது, அதன் முதல் தீவிர அருங்காட்சியகப் பயிற்சி திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையின் நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியகம் (MMCA Sri Lanka) தனது முதல் தீவிர அருங்காட்சியக நிகழ்ச்சித்திட்டத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. இலங்கையின் கலாசாரத் துறையில் தொழில் சார்ந்த திறனைக் கட்டியெழுப்புவதற்கான தேவையை நிவர்த்தி செய்வதற்காக, இப்பயிற்சித் திட்டத் தொடர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் கலாச்சார மரபு நிறுவனம் (Cultural Heritage Agency of the Netherlands), மற்றும் ஆம்ஸ்டர்டாம் கலை பல்கலைக்கழகத்திலுள்ள ரெய்ன்வார்ட் அகாடமியுடன் (Reinwardt Academy) இணைந்து, இலங்கை MMCAயானது முதல் முறையாக இத்தகைய தீவிர அருங்காட்சியக பயிற்சியை வழங்க செயல்படுகிறது. இம்முயற்சிக்கு இலங்கையில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தின் தாராளமான ஆதரவு இன்றியமையாதது.

இந்த தீவிர அருங்காட்சியக நிகழ்ச்சித்திட்டமானது, பொது மற்றும் தனியார் கலை நிறுவனங்களில் கலைத் தொகுப்புகளுடன் மற்றும்/அல்லது கண்காட்சி நிகழ்ச்சிகளுடன் ஈடுபடுகின்ற கலாச்சார துறை நிபுணர்களுக்காகவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் கலந்துரையாடலுக்கும், செயற்திட்ட பணி மூலம் கற்றலுக்கும், பங்குபற்றுவோர் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கும் கணிசமான நேரம் ஒதுக்கப்படும். நெதர்லாந்தின் கலாச்சார பாரம்பரிய நிறுவனம் மற்றும் ரெய்ன்வார்ட் அகாடமியில் இருந்து வருகை தரும் நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் வழிகாட்டுதலால் இத்திட்டத்தில்

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

பங்குபற்றுவோர் பயனடைவார்கள். இவை யாவற்றையும் நடத்த இலங்கை MMCA ஊழியர்கள் உதவி புரிவார்கள்.

பொதுவான கருப்பொருள்கள் மற்றும் பார்வையாளர்களின் ஈடுபாடு பற்றிய தற்போதைய விவாதங்களை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் வகையில் இந்தப் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி திட்டத்தில் பங்குபற்றுவோர், தாம் பணிபுரியும் நிறுவனங்களில் பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தவும், பார்வையாளர்களை அதிகரிக்கவும், பொதுமக்களுடனுள்ள தொடர்பை அதிகரிக்கவும் தேவையான நீண்டகால அர்ப்பணிப்புகளை மேற்கொள்ள உதவக்கூடியவாறு பயிற்சி பெறுவர்.

“இன்றைய அருங்காட்சியகங்களைப் பற்றி எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதைக் குறித்து ஒருங்கிணைப்பாளர் குழு சிறந்த நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது. அவர்களின் அர்ப்பணிப்பு, அறிவு, ஆற்றல் ஆகியவை தலை சிறந்தவை. இக்குழுவின் முழு கவனம் மற்றும் களைப்பற்ற சக்தியுடன், நடத்தப்படவிருக்கும் பயிற்சி திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். MMCAயுடன் இணைந்து நடத்தப்போகின்ற இந்த பயிற்சித் திட்டத்தை ரெயின்வார்ட் அகாடமி உண்மையிலேயே எதிர்பார்க்கிறது,” என்று ஆம்ஸ்டர்டாம் கலைப் பல்கலைக்கழக ரெயின்வார்ட் அகாடமியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாளரான ரூபன் ஸ்மிட் குறிப்பிட்டார்.

முதலாவது தீவிர அருங்காட்சியகப் பயிற்சித் திட்டம், 2022ம் ஆண்டு ஐப்பசி (அக்டோபர்) மாதம் 24 முதல் 28ம் திகதி வரை கொழும்பில் நேர் சந்திப்பாக நடைபெறும்.

இப்பயிற்சி திட்டத்தில் பங்குபற்ற விரும்புவோர், விண்ணப்பிப்பதற்கு, 2022ம் ஆண்டு ஐப்பசி (அக்டோபர்) மாதம் 5ம் திகதி காலக்கெடுவுக்குள் அல்லது அதற்கு முன்னதாக தங்கள் சுயவிபரங்களை (CV அல்லது Resume) education@mmca-srilanka.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். மேலும் தகவலுக்கு அவர்கள் +94 76 22 43 120 ஐ அழைக்கலாம்.